# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

வியாழக்கிழமை 17.05.2021 | supeedsam.com | supeedsam@gmail.com







# மட்டக்களப்பின் வளங்களை மட்டு மக்களே அனுபவிக்க வேண்டும்



பந்துல குணவர்த்தன

(மட்டக்களப்பு மாவட்ட நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் வளங்களை மட்டக்களப்பு மக்களே அனுபவிக்கவேண்டும். உங்கள் உழைப்பு இடைத்தரகர் ஊடாக இன்னுமொரு நபருக்குச் செல்லும் நிலை மாறவேண்டும்.இது விடயத்தில் நாட்டின் ஜனாதிபதியும் எமது அரசாங்கமும் உறுதியாக உள்ளது. இவ்வாறு மட்டக்களப்பில் வைத்து தெரிவித்தார் வர்த்தக வாணிபத்

02 ஆம் பக்கத்தில்...

## மட்டக்களப்பில் பந்துல குணவர்த்தன



(ரக்ஸனா)

வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன புதன்கிழமை மட்டக்களப்பு மாவட்டத்திற்கு உத்தி யோகபூர்வ விஜயமொன்றினை மேற்கொண்டுள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

## கல்முனையில் மூடப்பட்ட கடைக்கு சிவப்பு நோட்டிஸ்


(எம்.எம். ஜெஸ்மின், நூருள் ஹுதா உமர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக் குட்பட்ட கல்முனையில் மூடப்பட்டிருந்த உணவகம் ஒன்றுக்கு

02 ஆம் பக்கத்தில்...

## இரண்டாம் மொழி ஆசிரியர் பயிற்சிக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு நியமனம் வழங்க வேண்டும்

### ஒன்லைன் ஊடாக பாதிக்கப்பட்டவர்கள் போராட்டம்



(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

இரண்டாம் மொழி ஆசிரியர் பயிற்சிக்கு 2019 ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்ட 1300 பயிலுனர்களுக்கும் உடனடியாக நியமனம் வழங்க வேண்டும் என பாதிக்கப்பட்டவர்கள் நேற்று ஒன்லைன் ஊடாக வீட்டிலிருந்தவாறு கவனஈர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

2019 ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கத்தின் ஆட்சியின்போது அலரிமாளிகையில்

02 ஆம் பக்கத்தில்...

## சமுர்த்தி அலுவலகர் மீது மருதமுனையில் தாக்குதல்!

மருதமுனையைச் சேர்ந்த சமுர்த்தி அலுவலகர் மீது நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை அடுத்து இருவர் நேற்று கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

02 ஆம் பக்கத்தில்...

## சேதன பசளை வேளாண்மை ஒரு அரசியல் முடிவு அல்ல

(இஃஜாஸ் ஏ பரீட்)

'இலங்கையை ஒரு முழுமையான சேதனைப் பசளை கொண்ட வேளாண்மையாக மாற்றுவதற்கான முடிவு நாட்டை மனதில் கொண்டு எடுக்கப்பட்ட ஒரு மனிதாபிமான முடிவு என்று கிழக்கு மாகாண



02 ஆம் பக்கத்தில்...






## கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகத்திற்கு காணி, நிதி அதிகாரத்தினை இடைநிறுத்தி இருப்பது நல்ல செயல் அல்ல



(சந்திரன் குமணன்)

கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகத்திற்கு காணி, நிதி அதிகாரத்தினை இடைநிறுத்தி இருப்பது நல்ல செயல் அல்ல என சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்கு விஜயம் செய்த பாராளுமன்ற

02 ஆம் பக்கத்தில்...

## இலங்கையில் நெருங்கும் நான்காவது அலை!

(காந்தன்)

இலங்கையில் கொரோனா தொற்றின் நான்காவது அலை ஏற்படக் கூடிய ஆபத்து நெருங்கி வருவதாக இலங்கை மருத்துவர்

02 ஆம் பக்கத்தில்...

## கிழக்கில் 11835 தோற்றுக்கள்; 233 பேர் பலி: மட்டக்களப்பில் தோற்று 4000ஐ கடந்தது

( வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கு மாகாணத்தில் நேற்று(16)வரை கொரோனாவுக்கு 233பேர் பலியாகியுள்ளனர். இவர்களில் 207 பேர் மூன்றாவது அலையில் மரணித்தவர்களாவர். திருகோணமலை மாவட்டத்தில் இதுவரை 119பேர் மரணித்துள்ளனர்.

02 ஆம் பக்கத்தில்...

## 15 நாட்களில் வடக்கு- கிழக்கில் 4,732 பேருக்கு கோவிட் தோற்று

(ராஜ்)

முதலாம் திகதி முதல் 15 ஆம் திகதி வரையான கடந்த 15 நாட்களில் மட்டும் 39,564 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் புள்ளிவிபர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

02 ஆம் பக்கத்தில்...











## களுவங்கேணியில் காதலர்கள் நஞ்சு விதையுண்டு தற்கொலை

ஏறாவூர் பொலிஸ்பிரிவிற்குட்பட்ட அந்தோனியார் வீதி , களுவங்கேணி பிரதேசத்தைச் சேர்ந்த காதலர்களான நாகராசா திரிஷாளினி (16 வயது) மற்றும்

02 ஆம் பக்கத்தில்...











## வடக்கு, கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடிய 92 உறவுகள் இதுவரை உயிரிழப்பு!

வடக்கு, கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடி போராட்டம் மேற்கொண்டு வரும் அவர்களது உறவுகள் அவர்களின் விடுதலையை வலியுறுத்தி பல்வேறு போராட்டங்களையும் நீண்டகாலமாக

02 ஆம் பக்கத்தில்...

## கிழக்கில் 11835 தொற்றுக்கள்; 233 பேர் பலி: மட்டக்களப்பில்

கிழக்கில் இதுவரை மரணித்த 233பேரில் திருகோணமலை மாவட்டத்தில் அதிகூடிய 121பேரும், அம்பாறைப்பிராந்தியத்தில் 23 பேரும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 59 பேரும் , கல்முனைப்பிராந்தியத்தில் 30 பேரும் மரணித்துள்ளனர்.

இதே வேளை கடந்த 6நாட்களாக கிழக்கில் 70112பேருக்கு தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன. மட்டு.மாவட்டத்தில் 22279பேருக்கும் ,அம்பாறை பிராந்தியத்தில் 23307 பேருக்கும், திருமலை மாவட்டத்தில் 23917 பேருக்கும் செலுத்தப்பட்டுள்ளன.

கல்முனைப்பிராந்தியத்திற்கு இதுவரைதடுப்பூசி செலுத்தும்பணி ஆரம்பிக்கப்படவில்லை. கிழக்கு மாகாணத்தில் இதுவரை 11835பேருக்கு கொரோனாத்தொற்று ஏற்பட்டுள்ளது. இவர்களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 4000ஐக் கடந்த தொற்று நேற்றுவரை 4058ஆகியது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகூடிய 4058 பேரும், திருகோணமலை 3862பேரும் ,அம்பாறைப் பிராந்தியத்தில் 1805 பேரும், கல்முனைப்பிராந்தியத்தில் 2010 பேரும் தொற்றுகுள்ளாகியுள்ளனர்.

கிழக்குமாகாண சுகாதாரத்திணைக்களம் வெளியிட்ட புள்ளவிபரங்களிலிருந்து இதனை அறியமுடிகிறது.

## வடக்கு, கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்ட

மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடியலைந்து செ ால்லெண்ணா துன்பங்களையும், துயரங்களையும் சுமந்து வயோதிப ஒய்வு காலங்களில் நோய்வாய்ப்பட்டு வைத்தியசாலைகளிலும் ஏனைய உறவுகளின் பாதுகாப்பிலும் இருந்து வருகின்றனர்.

இவ்வாறு தமது உறவுகளை தேடியலைந்து 92 உறவுகள் நோயினால் பீடிக்கப்பட்டு உயிரிழந்துள்ளனர். வவுனியா மாவட்டத்தில் 12 பேர் இவ்வாறு உயிரிழந்துள்ளதாக உறவுகள் தெரிவித்துள்ளனர்.

வடகிழக்கில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் வீதிகளிலிருந்து தமது போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

சர்வதேசத்தின் தலையீடுகளை கோரியும் ஐக்கிய நாடுகள் தமது விடயங்களில் தலையீடு செலுத்தி தீர்வுகளை பெற்றுத்தருமாறு கோரியும் உறவுகள் தமது போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கல்முனையில் மூடப்பட்ட கடைக்கு சிவப்பு

சுகாதார தரப்பினரால் நேற்று மாலை சிவப்பு நோட்டிஸ் ஒட்டப்பட்டதாக அந்த வர்த்தக நிலைய உரிமையாளர் வருத்தம் தெரிவித்தார்.

நேற்றுக்காலை கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஜீ. சுகுணன் தலைமையில் கல்முனையில் சட்டத்துக்கு புறம்பாக இயங்கியவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் திறந்து வியாபாரம் செய்த பல வர்த்தக நிலையங்கள் மீதும், அனுமதியின்றி வீதிகளில் பயணித்தோர் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்ட சூழ்நிலையிலையிலையே இந்த சம்பவமும் நடைபெற்றுள்ளது.

பயணத்தடை காரணமாக மூடப்பட்டிருந்த குறித்த உணவக முன் கண்ணாடியில் சிவப்பு நோட்டிஸ் ஒட்டப்பட்டிருந்ததுடன் அந்த உணவகம் வீட்டுக்கு வீடு உணவை கொண்டு சேர்க்க முறையான அனுமதி பெறப்பட்டிருந்த நிலையிலையே இந்த சம்பவம் நடைபெற்றுள்ளது. இருந்தாலும் பயணத்தடை காலத்தில் கடையை திறந்து வியாபாரம் செய்ய அனுமதி வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## களுவங்கேணியில் காதலர்கள் நஞ்சு விதையுண்டு தற்கொலை

அரியராசா விஜயதனுஷன் (19 வயது ) ஆகிய இருவரும் தங்களின் காதலை பெற்றோர் ஏற்க மறுத்ததால் இருவரும் நஞ்சு விதை உண்டு தற்கொலை செய்த சம்பவம் இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது குறித்த இருவருக்கும் இடையே நீண்ட நாட்களாக வீட்டாரின் அனுமதியின்றி காதலித்து வந்த நிலையில் இருவரினது வீட்டார் அவர்களின் காதலுக்கு தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வந்ததாகவும் சம்பவ தினமான நேற்று முன்தினம் அவர்களின் வீட்டை விட்டு வெளியேறிய நிலையில் இருவரினதும் வீட்டார் தேடிச்சென்ற போது இருவரும் நஞ்சு விதை உண்ட நிலையில் மயக்கமுற்று இருந்தாகவும் பின்னர் செங்கலடி வைத்தியசாலைக்கு எடுத்துச்சென்ற போது குறித்த இளைஞன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாகவும் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யுவதியை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை அழிக்கப்பட்டு வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி யுவதி உயரிழந்துள்ளதாக விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

மட்டக்களப்பு நீதிமன்ற நீதிவான் அவர்களின் உத்தரவிற்கமைவாக சம்பவ இடத்திற்கு சென்ற ஏறாவூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.எச்.எம்.ஹக்கீம் சடலத்தை பார்வையிட்ட பின்னர் பிரேதத்தை பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி உத்தரவிட்டார்.

சம்பவம் பற்றிய மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## இலங்கையில் நெருங்கும் நான்காவது

சங்கத்தின் தலைவர் விசேட வைத்திய நிபுணர் பத்மா குணரத்ன எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பயணக்கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் மக்களின் நடமாட்டம் மற்றும் புழக்கங்கள் அதிகரித்துவிட்டதாக தெரிவிக்கின்ற அவர், பயங்கரமான நிலையிலிருந்து இலங்கை மீண்டுவிட்டது என கூறமுடியாது என்றும் தெரிவித்துள்ளார். இலங்கை மருத்துவர் சங்கத்தின் தலைவர் விசேட வைத்திய நிபுணர் பத்மா குணரத்ன நேற்று இலங்கையின் கொரோனா பாதிப்பு மற்றும் அச்சுறுத்தலின் தற்போதைய நிலைமை குறித்து தென்னிலங்கை ஊடகமொன்றுக்கு நேர்காணல் ஒன்றை வழங்கியிருக்கின்றார்.

இதன்போது கருத்து வெளியிட்ட அவர், பயணக்கட்டுப்பாடு என்ற வார்த்தையை பயன்படுத்தினாலும் மக்களின் நடமாட்டம் இன்னும் குறையவில்லை. மக்கள் வழங்க வேண்டிய ஒத்துழைப்பை சரிவர வழங்காவிட்டால் தற்போது நடைமுறையிலுள்ள பயணக்கட்டுப்பாட்டு முறை மேலும் நீடிக்கப்படலாம்.




## 15 நாட்களில் வடக்கு- கிழக்கில் 4,732 பேருக்கு கொவிட் தொற்று

நாட்டில் அதிகளவாக 15 நாட்களில் கம்பஹாவில் 7,994 பேருக்கும் கொழும்பில் 7,352 பேருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது.

இதனைவிட களுத்துறை - 3,703, இரத்தினபுரி 2,352, குருநாகலை - 2,120, கண்டி - 1,731, காலி - 1,571,நுவரெலியா - 1,464, மட்டக்களப்பு - 1,320, யாழ்ப்பாணம் - 1,269, பதுளை - 1,091, கேகாலை - 1,087, மாத்தறை - 938, அனுராதபுரம் - 800, அம்பாறை - 709, புத்தளம் - 497, ஹம்பாந்தோட்டை 473, திருகோணமலை - 406, கிளிநொச்சி - 372, பொலநறுவை -365, மொனராகலை - 356, வவுனியா - 356, முல்லைத்தீவு - 192, மன்னார் - 108 பேருக்கு கடந்த 15 நாட்களில் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் கடந்த 15 நாட்களில் 4,732 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் - 1,269, வவுனியா - 356, முல்லைத்தீவு - 192, மன்னார் - 108 மற்றும் கிளிநொச்சியில் 372 பேர் அடங்கலாக கடந்த 15 நாட்களில் வடக்கு மாகாணத்தில் 2,297 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

அத்துடன், மட்டக்களப்பு - 1,320, அம்பாறை - 709 மற்றும் திருகோணமலையில் 406 பேர் அடங்கலாக கிழக்கு மாகாணத்தில் கடந்த 15 நாட்களில் 2,435 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள புள்ளிவிபர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகத்திற்கு காணி, நிதி

உறுப்பினர்கள் தவராசா கலையரசன் , சிவஞானம் சிறீதரன் , காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணப்பிள்ளை ஜெயசிறில் ஆகியோர் நேற்று நண்பகல் வேளை செயலக விடயம் தொடர்பாக கலந்துரையாடிய பின்னர் இவ்வாறு சிறீதரன் தெரிவித்தார்.

மேலும் அவர் குறிப்பிடுகையில்...

கல்முனை வடக்குப் பிரதேச செயலகத்திற்குரிய கணக்காளரை நியமிக்காமை மற்றும் காணிகள் அதிகாரமற்ற நிலையில் அந்தப் பிரதேசம் இயங்குகின்ற விடயங்கள் தொடர்பில் தகவல்களைத் திரட்டிக் கொண்டு அங்கிருந்தவர்களுடன் உரையாடி பிரதேச செயலகத்தினையும பார்வையிட்டுள்ளோம்.

இந்தப் பிரதேச செயலகம் ஆரம்பிக்கப்பட்டு சுமார் 30 வருடங்களைத் தாண்டியும் பிரதேச செயலகத்தினுடைய நடவடிக்கைகள் நடைபெறுகின்ற போதும் ஒரு கணக்காளரை நியமிக்காமல், நியமித்தும் அதனை நிறுத்தியும் நடவடிக்கைகளை அரசங்கம் மேற்கொண்டிருப்பது ஒரு நல்ல செயலல்ல.

அதேபோல் தன்னுடைய பிரதேச செயலக எல்லைக்குள் காணி அதிகாரமானதும் அப்பிரதேச செயலகத்திற்கு வழங்கப்படாமல் இருக்கின்றதே தவிர மற்றைய அனைத்து நடவடிக்கைகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

நாங்கள் தொடர்ந்து இந்தப் பிரதேச செயலகத்தற்குரிய காணி நிதி அதிகாரங்களை உரிய தரப்புகளோடு பேசி மிக விரைவாக அவற்றை இப்பிரதேச செயலகத்திற்குப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். அதனை இன்னும் மிக வேகப்படுத்தி செயற்படுத்துவோம் என தெரிவித்தார்.




## சமுர்த்தி அலுவலகர் மீது மருதமுனையில் தாக்குதல்!

மருதமுனையைச் சேர்ந்த பெண் ஒருவர், 5000 ரூபா கொடுப்பனவு தொடர்பில் சமுர்த்தி அலுவலகரை சந்தித்துள்ளார். இதன் போது வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. குறித்த பெண் இந்த சம்பவத்தை தனது வீட்டிற்கு சென்று கூறியுள்ளார்.

இதனையடுத்து , ஆத்திரம் அடைந்த பெண்ணின் உறவினர்களான இரு இளைஞர்கள் சமுர்த்தி அலுவலகரை தாக்கியுள்ளதாக கூறப்படுகிறது.

பின்னர் சமுர்த்தி அலுவலகரின் முறைப்பாட்டுக்கு அமைய , மேற்படி இரு இளைஞர்களும் கைது செய்யப்பட்டு நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட போது இருவரையும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. பெண் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

## சேதன பசளை வேளாண்மை ஒரு அரசியல் முடிவு அல்ல

ஆளுநர் அனுரதா யஹம்பத் தெரிவித்தார்

சிலரின் கருத்துப்படி, அதற்கு அரசியல் நிகழ்ச்சி நிரல் இல்லை. கிழக்கு மாகாணத்தில் செயற்கை பசளை வேளாண்மையை நடைமுறைப்படுத்துவதற்கான எதிர்கால திட்டங்கள் குறித்து விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று திருகோணமலை ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் விசேட உரையாற்றுகையில் மேற்கண்டவாறு அவர் கூறினார்.

இந் நிகழ்வில் அவர் தொடர்ந்தும் பேசுகையில்:

'கிழக்கு மாகாணத்தில், கடந்த சில பருவங்களில் பெரும் சவால்களுக்கு மத்தியில் செயற்கைப் பசளை கொணடு நெல் வளர்ப்பதில் நாங்கள் மிகவும் பிடிவாதமாக இருந்தோம்.

இந்த நாட்டை விஷம் இல்லாத தீவாக மாற்ற கிழக்கு மாகாணத்திலிருந்து அந்த பயணத்தைத் தொடங்கினோம்.

இந்த இரசாயன உர பயங்கரவாதத்தை ஒழிக்க ஜனாதிபதி எடுத்த முடிவு மிகவும் மதிப்புமிக்கது. அது நம் வாழ்வில் நாம் அடைந்த வெற்றி.

முப்பது ஆண்டுகால யுத்தம் முடிவடைந்தது, ஆனால் வடக்கு மற்றும் கிழக்கு மக்களின் இதயங்களை எங்களால் அடைய முடியவில்லை. முந்தைய நல்லாட்சி அரசாங்கத்தால் அந்த மக்களின் இதயங்கள் மேலும் சேதமடைந்தன.

இப்போது நாம் மீண்டும் அந்த இதயங்களை நெருங்க முடியும். இது எங்கள் மாகாண மக்களின் அபிலாஷைகளிலிருந்து தெளிவாகிறது. மக்களின் இதயத்தில் இருப்பது பயனற்றது. ஒரு வளமான கிழக்கு தேவை. நான் வீட்டிற்குச் செல்லும் போது தான். இல்லையென்றால் நான் என் வேலையை சரியாக செய்திருக்க மாட்டேன்.

எனவே, அதிகாரிகள் என்ற வகையில், ஜனாதிபதியால் எடுக்கப்பட்ட நடவடிக்கையை வலுப்படுத்த நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவோம். எனவும் ஆளுநர் கூறினார்.

இந்த நிகழ்வில் மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் மற்றும் மாகாண விவசாய பணிப்பாளர், ஆகியோர் கலந்து கொண்டனர்.

## இரண்டாம் மொழி ஆசிரியர் பயிற்சிக்கு தெரிவு

வைத்து அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களினால் தமக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டு தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் ஊடாக பயிற்சி நெறியையும் பூர்தி செய்துள்ளோம் எனினும் எமக்கான ஆசிரியர் நியமனம் ஆட்சி மாற்றம் காரணமாக வழங்கப்படாமல் உள்ளது. ஆனால் இதற்கென சுமார் 400 மில்லியன் ரூபா நிதி அப்போதைய ஆட்சியில் தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்ததாக பாதிக்கப்பட்டவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

நீதி கோரி ஜனாதிபதி செயலகம் மற்றும் NILET முன் பல ஆர்ப்பாட்டங்கள் நடத்திய போதிலும் எமக்கு நம்பிக்கையூட்டும் ஒரு பதில் 27.02.2020 அன்று ஜனாதிபதி செயலகம் முன் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது கிடைத்தது. அப்போதைய ஜனாதிபதி செயலாளர் எங்கள் ஆசிரியர் பயிற்சித் திட்டத்தை விரைவில் ஆரம்பிப்போம் என்று தெரிவித்தார். துரதிர்ஷ்டவசமாக கொரோனா பரவலை காரணம் காட்டி இந்த நிகழ்ச்சித் திட்டத்தை பிற்படுத்துவது கவலைக்குரிய விடயமாகும். என இம்மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

நல்லிணக்கத்தை அடைவது அப்பாவி படித்த இளைஞர்களை ஏமாற்றுவதன் மூலம் உங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் வரை மட்டும் தானா? என்பதே எங்கள் ஒரே கேள்வி. அரசியல் கட்டமைப்பிற்கு அப்பால் பார்த்து இந்த பிரச்சினைக்கு நியாயம் செய்ய முடியாமல் போய்விட்டதா? இந்த ஆசிரியர் பயிற்சி எனும் மோசடியை ஆராய்ந்து விரைவில் பாதிக்கப்பட்டு நடுத் தெருவில் நிற்கும் எமக்கு நீதியை பெற்றுத்தர வேண்டும். குறித்த இந்த விடயத்தில் அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் கவனம் செலுத்தி ஆசிரியர் நியமனங்களை வழங்க வேண்டும் எனவும் பாதிக்கப்பட்டவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## மட்டக்களப்பில் பந்துள்ள குணவர்த்தன

இதன்போது கள்ளியன்காடு உணவு களஞ்சியசாலையில் மட்டக்களப்பு மாவட்ட மக்களின் நன்மை கருதி அமையப்பெறவுள்ள 'ரஜவாச' பல்பொருள் விற்பனை நிலையம் தொடர்பாக அமைச்சரினால் விரிவாக ஆராயப்பட்டதுடன், நிவர்த்திக்கப்பட வேண்டிய குறைபாடுகள் தொடர்பாக அதிகாரிகளுடன் கலந்துரையாடியிருந்தார்.

குறித்த களவிஜயத்தின் போது மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத்தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான சிவனேசதுரை சந்திரகாந்தன், மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன், வானிக வர்த்தக அமைச்சின் உணவு ஆணையாளர் ஜே.கிறிஸ்ணமூர்த்தி, சதோச நிறுவனத்தின் தலைவர் ஆனந்த பீரீஸ், வானிக வர்த்தக அமைச்சின் உயரதிகாரிகள், மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி.சுதர்சனி ஸ்ரீகாந்த், மட்டக்களப்பு மாவட்ட உதவி அரசாங்க அ.நவேஸ்வரன், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் சசிகலா புண்ணியமூர்த்தி உள்ளிட்ட துறை சார் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.




## மட்டக்களப்பின் வளங்களை மட்டு மக்களே அனுபவிக்க வேண்டும்

துறை அமைச்சர் பந்துள குணவர்த்தன.

நேற்று மட்டக்களப்பு மாவட்டத்திற்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றினை மேற்கொண்ட அமைச்சர் அதிகாரிகள் மத்தியில் தொடர்ந்து உரையாற்றுகையில்; எரிபொருள் பிரச்சனை இலங்கைக்கு மட்டுமல்ல உலக நாடுகள் முழுவதும் பிரச்சினை இருக்கின்றது இலங்கையில் எரிபொருள் விலை உயர்வால் அரசாங்கத்துக்கு எந்தவிதமான லாபமும் இல்லை நாட்டு மக்கள் தற்போது வரி செலுத்தும் விகிதம் குறைந்துள்ளது.

காரணம் 100/ 15 வீதம் வரி செலுத்திய மக்கள் தற்போது 100/08 விதமான வரிகளை செலுத்துகிறார்கள் ஆகவே இந்த அரசாங்கத்தினால் மக்களுக்கு எந்த வித சுமையையும் கொடுக்கவில்லை.

உலகிலேயே எரிபொருளின் விலை குறைவானது வரலாற்றில் முதல் தடவையாக 2015ஆம் ஆண்டு தான் குறைந்துள்ளது எதிர் கட்சியினர் ஆட்சியில் இருந்தனர் அப்போது விலை உயர்வுதான் காணப்பட்டது .

ஆகவே இந்த விலை உயர்வு என்பது உலக நாடுகளின் விலை உயர்வுக்கு ஏற்பவே இலங்கையிலும் அதிகரித்துள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

SwissLife
Select

சுவிசில் சொந்த வீடு
வாங்க விரும்பும் உறவுகளே,
அவதானமாகச் செயற்படுங்கள்.
உங்கள் கடனுக்கான வட்டி வீதம்
எப்போதும் அதிகரிக்க கூடும்.
எனவே, சரியான வங்கியையும்,
வட்டி வீதத்தையும்
தெரிந்து கொள்ளுங்கள்.

உங்கள் வாழ்வின் சகல
அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும்
ஒரே ஒரு நிறுவனம்...

மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி



Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.

Email : krishnasamy.thileepan@swisslife-select.ch Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65

உதயகுமார் கல்வி நிலையம்



முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com

SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28

வீட்டுக்கடன் 0.62% தொடக்கம்
10% இல் சொந்த வீடு கட்ட அல்லது வாங்க

- இருக்கும் வீட்டை வைத்து இன்னொரு வீட்டை வாங்க...
- வீடு வாங்க. விற்க, கட்ட, திருத்த...
- வீடு வாங்குவதற்கான ஆயுட்காப்புறுதி
- Architect வேலைகள்

இலங்கையில் வீடுகள், காணிகள்,
விற்க, வாங்க, கட்ட, திருத்த
இலங்கைக்கு போக
வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து
கொண்டே செய்யலாம்.

» கிறங்கன்காசே
» ஆயுட்காப்புறுதி
» பயணக்காப்புறுதி
» சட்டக் காப்புறுதி

Sj SRI JEWELLERY



Swiss, Zürich இல் மிகப்
பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்
பரம்பரை பரம்பரையாக
நகைத் தொழிலில்
அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்
வைர தாலி கொடி, மோதிரம், வளையல்
பெயர் பெண்டன், மற்றும் அனைத்து
நகைகளும் செய்து தரப்படும்.
திருத்த வேலைகளும் உடனுக்குடன்
செய்து தரப்படும்.
+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch

MATHE BILDUNGSZENTRUM
கணித கற்கைநெறி மையம்
MBZ
கல்வியே துணை
பள்ளித் தலைமைத்தும்
பேரெடுக்கும் பிள்ளைகள்.
அள்ளிப் பெற்றுவரும்
நிறைவான புள்ளிகள்!
உள்ளதை சொல்வதெனில்
எங்ஙனம் சாத்தியம்..
எள்ளளவும் பொய்யில்லை
எட்டிவந்து பாரும்!!
- MATHE BILDUNGSZENTRUM
Mathe மகேந்திரா -வின் தெளிவான
கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.
S.MAHENDIRAN
076 431 83 79
mbz.mahe@gmail.com
MATHE மட்டுமல்ல
Deutsch, Französisch, Englisch, Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe
அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்
Oerlikon, Uster, Schaffhausen

Aaran Ayurveda
& Wellness Massage



Weinberg Strasse - 22, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | 077 982 1291 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt

# அரசின் முறையான திட்டமிடல் இல்லாமையினால் அப்பாவி மக்கள் வதைக்கப்படுகிறார்கள்

## தமிழ் தேசிய மக்கள் முன்னணி குற்றசாட்டு



(நூருல் ஹுதா உமர்)
(பாறூக் ஷிஹான்)

இலங்கை அரசு கொழும்பில் சீன ஈழத்தை (துறைமுக நகரம்) வழங்கியுள்ளது. இதனால் இலங்கை வாழ் சிங்கள மக்கள் சீனாவுக்கு எதிராக போராடவேண்டிய காலம் இனி வரும். இனிமேல்தான் இதன் விளைவை இலங்கை அரசு அனுபவிக்கும் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப்பேச்சாளர் சட்டத்தரணி கனகரட்ணம் சுகாஷ் தெரிவித்தார். அம்பாறை ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அங்கு கருத்து வெளியிட்ட அவர், நான்காம் கட்டமாக எங்களின் நிவாரணப்பணி அம்பாறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. யாழிலிருந்து மலையகத்தை நோக்கி சென்ற எங்களின் நிவாரணப்பணியின் போது இருந்த சோதனை சாவடிகளுக்கும் மலையகத்திலிருந்து அம்பாறைக்கு வரும் போது இருந்த சோதனை சாவடிகளுக்கும் நிறையவே வித்தியாசம் இருந்தது. அம்பாறை மாவட்டத்தில் நாங்கள் அறிந்தவரை நிறைய சோதனைசாவடிகள் இருக்கிறது. எங்களின் பயணங்களின் போது நாங்கள் வெளிநாட்டு பயணிகள் சுதந்திரமாக வீதிகளில் உலாவித்திரிவதையும், பணக்காரர்கள் நட்சத்திர விடுதிகளில் மகிழ்வுடன் இருப்பதையும் கண்டோம். இந்த பயணத்தடையில் அப்பாவி மக்கள் கடுமையாக வதைக்கப்படுகிறார்கள். எவ்வித முறையான நிவாரணங்களும் வழங்கப்படாமல் வீடுகளில் முடக்கப்பட்டுள்ளார்கள். இது முட்டாள்தனமாக உள்ளது. கொரோனாவிலிருந்து தப்பினாலும் பசியினால் தற்கொலை செய்யும் நிலையே இன்று உருவாகி வருகிறது.

அரசினால் வழங்கப்பட்ட 5000 ரூபாய் உதவித் தொகை தகுதியானவர்களில் 10 வீதமானவர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. மீதியுள்ள 90 சதவீதமானவர்களின் நிலை என்ன? யாரும் பசியுடன் இருக்க கூடாது என்பதற்காக நாங்கள் வீதிக்கு இறங்கி களப்பணி செய்கிறோம். இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களை மட்டுமே கொண்ட நாங்கள் செய்ததை காட்டிலும் தமிழ் தேசிய கூட்டமைப்பு 05 மடங்கு செய்திருக்க வேண்டும். செய்தார்களா? இல்லை அரசுடன் இருக்கும் டக்ளஸ், அங்கஜன், பிள்ளையான், வியாழேந்திரன் என யாராக இருந்தாலும் இவர்கள் தமிழ் மக்களுக்கு செய்த உதவிகள் தான் என்ன? இவர்கள் அமைச்சர்களாக இருந்து இராஜாங்க அமைச்சர்களாக இருந்து தமிழர்களுக்காக சாதித்தது என்ன? குறைந்தது மக்களின் பசியையாவது போக்கினார்களா?

சுகாதார துறை பற்றிய பூரண அறிவு எனக்கு இல்லாது போனாலும் பகுத்தறிவின் படி கொரோனா தொற்று உயிரிழப்பு அறிக்கைகளில் மிகைப்படுத்தல்கள் உள்ளதை உணர முடிகிறது. மட்டுமின்றி கொரோனா அறிக்கைகளிலும் குழப்பநிலை இருக்கிறது. பெறுமதியான தமது உயிர்களை காப்பாற்றி கொள்ள எல்லோரும் சுகாதார வழிமுறைகளை பேணி நடக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

# மட்டககளப்பில் மின்சாரம் தாக்கி பெண் ஒருவர் உயிரிழப்பு

(ரீ.எல்.ஜவ்பர்கான்)



மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கிரான்குளம் பிரதேசத்தில் மின்சாரம் தாக்கி பெண்ணொருவர் உயிரிழந்துள்ள சம்பவம் இடம்பெற்றுள்ளதாக காத்தான்குடி பொலிசார் தெரிவித்தனர்.

கிரான்குளம் வடக்கு பகுதியைச் சேர்ந்த நான்கு பிள்ளையின் தாயான 52 வயதுடைய ந.பிரமராணி என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்

குறித்த பெண் சம்பவதினமான நேற்று மாலை வழமைபோல தனது வெள்ளரி தோட்டத்துக்கு நீர் பாய்ச்சுவதற்கு நீர்பம்பில் மின்சாரத்தைக் கையாண்ட போது மின்சாரம் தாக்கி அவர் உயிரிழந்துள்ளதாக பொலிசாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிசார் மேற்கொண்டுவருகின்றனர்.

# 5 கிராம் ஹெரோயின் போதை பொருளுடன் இளைஞர் கைது

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை-மஹதிவுல்வெவ பிரதேசத்தில் ஐந்து கிரேம் ஹெரோயினை தம் வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் இளைஞரொருவரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மொரவெவ பொலிஸ் நிலையத்திற்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து குற்றத்தடுப்பு பொலிஸ் பொறுப்பதிகாரி பிரதீப் குமார் அவர்களின் தலைமையிலான குழுவினர் குறித்த இளைஞரை சோதனையிட்ட போது அவரிடமிருந்து 5 கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் அதே இடத்தைச் சேர்ந்த கே.ஜே.சுசந்த குமார (27வயது) எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட குறித்த இளைஞர் ஏற்கனவே கஞ்சா போதைப்பொருள் தொடர்பில் கைது செய்யப்பட்ட நிலையில் அவருக்கு எதிராக திருகோணமலை நீதிமன்றில் வழக்கு இடம்பெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட குறித்த இளைஞரை இன்றைய தினம் திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் மொரவெவ பொலிசார் தெரிவித்தனர்.

# உரமானிய தட்டுப்பாட்டினால் மட்டு. விவசாயிகள் தொடர்ச்சியாக திருப்பி அனுப்பப்படும் நிலை

(துறையூர் சஞ்சயன்)



நாட்டின் ஒரு சில மாவட்ட கமநல சேவைகள் நிலையங்களில் நிலவும் பாரிய உரத்தட்டுப்பாட்டினால், விளைச்சல் குன்றும் அபாயமுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

மட்டக்களப்பு மாவட்ட கமநல சேவைகள் நிலையங்களில் உரத்தை பெற்றுக்கொள்ளச் செல்பவர்கள், உரம் இல்லை என்ற நிலையில் அதிகாரிகளால் திருப்பி அனுப்பப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

செய்கை பண்ணப்பட்ட நெற்செய்கை மற்றும் மரக்கறி வகைகளுக்கு உரிய காலத்திற்குத் தேவையான உரம் இடப்படாமையால் விளைச்சல் குன்றும் அபாய நிலை ஏற்பட்டுள்ளதாகவும், இதனால் போதிய வருமானத்தைப் பெற முடியாத நிலைமையை எதிர்நோக்க நேரிடும் எனவும் விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஒரு சில கமநல சேவைகள் நிலையங்களில் உரம் வரவில்லையென, இன்று போய் நாளை வா என்ற நிலையில் விவசாயிகள் தொடர்ச்சியாக திருப்பி அனுப்பப்படுவதாகவும் தெரியவருகிறது.

இந்த நிலையில், கடைகளில் அதிக விலைக்கு உரம் விற்பனை செய்யப்படுவதாகவும் வறுமை நிலையிலுள்ளோர் பல்வேறு சவால்களை எதிர்கொள்வதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது. உரமானியம் தொடர்பில் விரைவில் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்குமாறு விவசாயிகள், அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# வியாபாரிகள் வியாபாரத்தையும் தாண்டி சமூக நலனையும் கவனத்தில் கொள்ள வேண்டும்



(மாளிகைக்காடு நிருபர்)

உலகை கடந்த வருட ஆரம்பம் முதல் கடுமையாக தாக்கிக்கொண்டிருக்கும் கொரோனா அலை மூன்றாவது கட்டத்தை எட்டி இலங்கையில் லட்சக்கணக்காண தொற்றாளர்களையும் ஆயிரத்தை தாண்டிய மரண பதிவுகளையும் கொண்டு மிகவேகமாக பரவி வருகிறது. இதனை கட்டுப்படுத்தி பெறுமதியான உயிர்களை காப்பாற்றி கொள்ள எல்லோரும் ஒருவருக்கு ஒருவர் புரிந்துணர்வுடன் கூடிய ஒத்துழைப்புடன் நடந்துகொள்ள வேண்டும். அதிலும் குறிப்பாக வியாபாரிகள் தங்களின் வியாபாரத்தையும் இலாப, நஷ்ட கணக்குகளையும் தாண்டி சமூக நலனையும் இந்த காலத்தில் கவனத்தில் கொள்ள வேண்டும் என காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தஸ்லிமா வஸீர் தெரிவித்தார்.

மாளிகைக்காடு அந்நூர் ஜும்மா பள்ளிவாசல் கலாச்சார மண்டபத்தில் நேற்று நடைபெற்ற மாளிகைக்காடு மொத்த மீன்வியாபாரிகள் மற்றும் மீனவர்கள் நல சங்கத்தினருடனான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் இங்கு கருத்து தெரிவித்த அவர். கொரோனா பரிசோதனைகள் செய்வது இந்த பிராந்திக்குத்தில் கொரோனா தொற்றை கட்டுப்படுத்தவே. அதற்கான முழு ஒத்துழைப்பையும் மீனவர்களும் மீன்பிடித்துறை சார் ஏனைய தொழிலாளிகளும் சுகாதார தரப்பினருக்கு முழுமையாக வழங்க வேண்டும் என்றார்.

காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய மேற்பார்வை பொதுசுகாதார பரிசோதகர் எஸ். வேல்முருகு, பொதுசுகாதார பரிசோதகர்களான கே. ஜெமீல், எம்.எம்.எம். சப்னூஸ் உட்பட மீன் வியாபாரிகள் சங்க தலைவர், செயலாளர் உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டிருந்த இந்த கூட்டத்தில் பிரதேச மீனவர்களும், வியாபாரிகளும் இந்த கொரோனா கால பயணத்தடையில் எதிர்நோக்கும் பிரச்சினைகள், மீன்வியாபாரத்தில் உள்ள சுகாதார சிக்கல்கள் தொடர்பில் ஆராயப்பட்டது.

# மட்டக்களப்பில் 30 போத்தல் சாராய போத்தல்களுடன் ஒருவர் கைது

(ரீ.எல்.ஜவ்பர்கான்)



பயணத்தடையை பயன்படுத்தி சட்டவிரோதமான முறையில் அதிவிசேட சாராய போத்தல்களைப் பதுக்கி வைத்து அதிக விலைக்கு விற்பனை செய்த ஒருவரை மட்டக்களப்பு குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸார் கைது செய்துள்ளதாக குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி.பண்டார தெரிவித்தார்.

நேற்று முன்தினமிரவு மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புதூர் சேத்துக்குடா பகுதியில் குற்றவிசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி.பண்டார தலைமையிலான பொலிஸ் குழுவினர் மேற்கொண்ட திடீர் சுற்றி வளைப்பின்போது குறித்த சாராய போத்தல்கள் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட நபரும் சாராய போத்தல்களும் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படவுள்ளன.

# 70 குடும்பங்களுக்கு உலர் உணவு பொருட்கள் வழங்கல்




(கதிரவன்)


திருகோணமலை இந்துக்கல்லூரி 1979ம் வருட உயர்தர மாணவர்கள் பயண தடை காரணமாக வருமானத்தை இழந்த 70 குடும்பங்களுக்கு உலர் உணவு பொருட்களை வழங்கி உள்ளனர்.

பாலையூற்று கோவிலடி கிராம அலுவலகர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு இவை வழங்கப்பட்டது.

தலா 2,000.00 பெறுமதியான பொதிகள் இவ்வாறு வழங்கப்பட்டது.

கனடா பிறேமா நிதியத்துடன் இணைந்து இச் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டது.

உயர்தர மாணவர் சுலைமான் தாஹிர் இவற்றை பயனாளிகளிடம் நண்பர்கள் சார்பில் வழங்கி வைத்தார்.









# கொரோனாவின் அலையிலிருந்து மக்களை பாதுகாக்க பிரதேச சபையினருடன் கலந்துரையாடலில் ஈடுபட்ட சுகாதாரத்துறையினர்

(நூருள் ஹுதா உமர் )

காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கொரோணா அலையை கட்டுப்படுத்தி கொரோணா தொற்றுக்குள்ளான மரணத்தை இல்லாமலாக்க எவ்வகையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பது தொடர்பிலான காரைதீவு பிரதேச சபையினருடனான கலந்துரையாடல் நேற்று காரைதீவு விபுலானந்த மண்டபத்தில் நடைபெற்றது.

காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தஸ்லிமா பஷீர், காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கி. ஜெயசிரில், காரைதீவு பிரதேச சபை உதவித்தவிசாளர் அ.ம. ஜாஹீர், காரைதீவு பிரதேச சபை உறுப்பினர்கள், காரைதீவு பிரதேசசபை செயலாளர், காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் மேற்பார்வை பொதுச்சுகாதார பரிசோதகர், பொதுச்சுகாதார பரிசோதகர் என பலரும் கலந்து கொண்டனர்.

இந்த கலந்துரையாடலின் போது கடந்த காலங்களில் நடைபெற்ற புரிந்துணர்வுன்மை நிலை தொடர்பில் பிரதித்தவிசாளர் மற்றும் பிரதேசசபை உறுப்பினர் எம்.என்.எம்.ரணீஷ் ஆகியோர் இங்கு கருத்து வெளியிட்டதுடன் எதிர்வரும் காலங்களில் எவ்வாறு சிறப்பாக செயற்பட்டு தொற்றை கட்டுப்படுத்தலாம் என்பது தொடர்பிலும் விரிவாக கலந்துரையாடப்பட்டது. எவ்வகையான முறையில் அண்டிஜன் பரிசோதனை நடைபெறுகிறது, கொரோணா தொற்றாளரை எப்படி சுகாதார துறை கையாள்கிறது, பிழையான தகவல்களினால் சுகாதார துறை சார்ந்த ஊழியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், மக்கள் மத்தியில் உள்ள தெளிவின்மைகள் தொடர்பிலும்



இங்கு மேற்பார்வை பொதுச்சுகாதர பரிசோதகர் எஸ். வேல்முருகு தெளிவுபடுத்தினார். அவசரகால நிலைகளில் வழங்கப்படும் அனுமதிப்பத்திர முறைகேடுகள் தொடர்பிலும், கொரோணா கட்டுப்பாடு தொடர்பிலும் இங்கு விரிவாக ஆராயப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# களத்தில் இறங்கினார் பிராந்திய சுகாதார பணிப்பாளர்



எம்.எம். ஜெஸ்மின், சர்ஜுன் லாபீர் ,எம்.என்.எம்.அப்ராஸ்

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஜி. சுகுனன் தலைமையிலான குழுவினர் நேற்று காலை முதல் பெரியநீலாவனை தொடக்கம் சாய்ந்தமருது வரையிலான பகுதியில் உள்ள பிரதான வீதிகளில் பயணம் செய்த வாகனங்களை பரிசோதனை செய்து உரிய அனுமதிப்பத்திரம் இன்றி பயணித்தவர்களுக்கு பி.சி ஆர் பரிசோதனை செய்ததுடன் குறித்த சிலருக்கு வழக்கு பதிவும் செய்தார்.

கல்முனை பிராந்தியத்தில் கொரோனா தொற்று தீவீரமடைவதை தொடர்ந்து அதனை முழுமையாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அதிரடி நடவடிக்கைகள் இனி தொடர்ந்தேர்ச்சையாக கல்முனை பிராந்தியம் முழுவதுமாக நடைபெறவுள்ளது.

இத் திடீர் கண்காணிப்பு நடவடிக்கையில் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.ஆர்.எம் அஸ்மி உட்பட பொதுச் சுகாதார வைத்திய அதிகாரிகள் இராணுவத்தினர் என பலரும் கலந்து கொண்டர்.

# கிரான் பறக்கியா மடு மக்களுக்கு உலர் உணவுப்பொருட்கள் வழங்கிவைப்பு

(ந.குகதர்சன்)



வாழைச்சேனை பாரதி கலை இலக்கிய மேம்பாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் தங்கராஜா ராசலெட்சுமி தம்பதிகளின் மகன் ரோஹன் (கனடா) அனுசரணையில் கிரான் பிரதேச பறங்கியாமடு கிராமத்து 180 குடும்பங்களுக்கான 1500ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

கொரோனா கிருமித்தொற்று பரவலால் வீடுகளுக்குள் முடங்கி சுயதொழில் வாய்ப்பையும் இழந்து வாழ்வாதாரத்தையும் இழந்துள்ள மீனவக் குடும்பங்களுக்கு பிரதேச கிராம சேவகரின் வழிகாட்டலில் இந்த உலர் உணவுப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இப்பணியில் கழகஉறுப்பினர்கள் சிலரும் கலந்து கொண்டனர்.

# ஜனாதிபதியுடனான தமிழ்தேசிய கூட்டமைப்பு சந்திப்பு ஆரோக்கியமான முன்னேற்றங்களை ஏற்படுத்தும்

## சசீந்திரன்



புதிய அரசியலமைப்பு யோசனைகள் தொடர்பாக ஜனாதிபதிக்கும் தமிழ்தேசிய கூட்டமைப்பு தலைமைகளுக்கும் இடையிலான சந்திப்பு பிற்போடப்பட்டிருக்கிறதே ஒழிய சந்திப்பு தவிர்க்கப்படவில்லை என தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட வாலிபர் முன்னணியின் செயலாளர் கணேசமூர்த்தி சசீந்திரன் தெரிவித்துள்ளார்.

செவ்வாய்க்கிழமை மாலை ஜனாதிபதிக்கும் தமிழ்தேசிய கூட்டமைப்பு தலைமைகளுக்கும் இடையில் ஏற்பாடாகியிருந்த சந்திப்பானது இறுதி நேரத்தில் இரத்தாகியுள்ளமை தொடர்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மட்டக்களப்பு வாலிபர் முன்னணியின் செயலாளர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர்,

புதிய அரசியலமைப்பு வரைபு தொடர்பாக தமிழ்தேசிய கூட்டமைப்பு என்ற ரீதியில் எங்களது கட்சியின் யோசனைகளை கடந்த வருட இறுதி பகுதியில் புதிய அரசியலமைப்பு வரைபு குழுவிடம் கையளித்திருந்தோம் அது முதலாம் கட்ட நடவடிக்கை, அதனைத் தொடர்ந்து இரண்டாம் கட்ட நடவடிக்கையாக புதிய அரசியலமைப்பு வரைபு நிபுணர் குழுவை எமது தலைமைகள் சந்தித்திருந்தது அதன் நிமிர்த்தமாக மூன்றாம் கட்ட நடவடிக்கையாக புதிய அரசியலமைப்பு யோசனைகள் தொடர்பாக இந்த நாட்டின் தலைவர் என்ற வகையில் ஜனாதிபதி அவர்களை சந்திப்பதற்க்காக ஒழுங்குகள் நடைபெற்றிருந்தது குறித்த சந்திப்பு இறுதி நேரத்தில் இரத்தாகியுள்ளது சந்திப்பு பிறிதொரு தினத்திற்க்கு பிற்போயுள்ளதே தவிர வேறேதுமில்லை ஜனாதிபதி செயலகம் இன்னுமொரு தினத்தில் எமது தலைமைகளை ஜனாதிபதி சந்திப்பதாக கூறியுள்ளது.

தமிழ் மக்களின் பிரதிநிதிகள் தமிழ் தேசிய கூட்டமைப்பே என்ற அந்த நிலையிலே தான் இந்த சந்திப்பு நிகழவிருந்தது என்பது மறுக்கவியலாது அந்த வகையில் ஜனாதிபதியுடனான சந்திப்பு நிகழ்ந்திருந்தால் நிச்சயமாக ஆரோக்கியமான முன்னேற்றங்கள் ஏற்படுவதற்கான சூழல் ஏற்பட்டிருக்கும்.

# கல்முனை கடற்கரையில் கட்டிடங்களை அகற்றி அழகுபடுத்த நடவடிக்கை

(அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனை கடற்கரைப் பகுதியிலுள்ள கட்டிடங்கள் அனைத்தும் அகற்றப்பட்டு, அப்பகுதியை பொது மக்களுக்கான பொழுது போக்கிடமாக அழகுபடுத்தி, அபிவிருத்தி செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கல்முனை பிரதேச செயலகத்தில் நேற்று புதன்கிழமை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலியின் ஏற்பாட்டில், திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ் தலைமையில் இடம்பெற்ற விசேட கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப், மாநகர ஆணையாளர் எம்.சி.அன்சார், மாநகர சபை உறுப்பினர்களான சட்டத்தரணி றொஷான் அக்தர், எம்.எஸ்.எம்.நிசார், ஏ.சி.ஏ.சத்தார், ஏ.ஆர்.அமீர், எம்.எஸ்.உமர் அலி, பொறியியலாளர்களான ஏ.ஜே. ஹலீம் ஜெளஸி, எம்.எம்.றியாஸ், கரையோரம் பேணல் திணைக்கள உத்தியோகத்தர் எம்.எஸ்.எம்.மப்ரூர் உட்பட பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம சேவகர்களும் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது கல்முனை பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கடற்கரைப் பிரதேசம் முழுவதையும் திறந்த வெளியாக மாற்றி, அழகுபடுத்தல், பூங்காக்கள், நடை பாதைகள், வாகனத் தரிப்பிடங்கள் மற்றும் பொழுது போக்கு அம்சங்களை ஏற்படுத்துவது குறித்து பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸினால் முன்வைக்கப்பட்ட வேலைத்திட்ட முன்மொழிவு தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இத்திட்டத்திற்காக கல்முனை கடற்கரை வீதியில் இருந்து கடல் பக்கமாக அமைந்துள்ள குடியிருப்புகள், வாடிகள், உணவகங்கள், கடைகள் உள்ளிட்ட அனைத்து கட்டிடங்களையும் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பது எனவும் முதற்கட்டமாக கரையோரம் பேணல் திணைக்களத்தினால் சம்மந்தப்பட்ட நபர்களுக்கு கால அவகாசம் வழங்கி, சிவப்பு அறிவித்தலை விடுப்பது எனவும் உரிய காலப்பகுதியினுள் கட்டிடங்களை அகற்றாத நபர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்து, சட்ட நடவடிக்கை எடுப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

அதேவேளை, வாடிகள் மற்றும் உணவகங்கள் வைத்திருந்த நபர்களுக்கு மாத்திரம் அவர்களது வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டு, இவ்வேலைத் திட்டம் பூர்த்தியடைந்த பின்னர் குறிப்பிட்ட சில பகுதிகளில் மாத்திரம் கொத்தணி அடிப்படையில் அத்தொழில்களுக்கான இடங்களை ஒதுக்கிக் கொடுப்பது எனவும் சுனாமி அனர்த்தத்தினால் வீடுகளை இழந்த மக்களுக்கு மாற்று வீடுகள் வழங்கப்பட்டிருப்பதனால் குடியிருப்புகளுக்கோ வேறு தேவைகளுக்கோ இப்பகுதியில் இடமொதுக்கிக் கொடுப்பதில்லை எனவும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

# வைத்தியசாலையின் வழமையான நடவடிக்கைகள் வேறொரு கட்டடத்தில் தொடர்ந்து இயங்கி வருகின்றது

## வைத்தியர் றஜீஸ்



(பைஷல் இஸ்மாயில்)

அட்டாளைச்சேனை தள ஆயுர்வேத வைத்தியசாலை கொவிட்-19 தொற்றாளர்களுக்கான சிகிச்சை மையமாக மாற்றியமைக்கப்பட்டுள்ளதால் வைத்தியசாலையின் வழமையான நடவடிக்கைகள் வேறொரு கட்டடத்தில் தொடர்ந்து இயங்கி வருவதாக, ஆயுர்வேத தள வைத்தியசாலையின் வைத்திய பொறுப்பதிகாரி டாக்டர் பீ.எம்.முஹமட் றஜீஸ் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் கொவிட்-19 தொற்றினால் பாதிக்கப்படுபவர்களை வேறு மாவட்டங்களுக்கு கொண்டு சென்று சிகிச்சை வழங்காமல் இம்மாவட்டத்திலேயே சிகிச்சை வழங்குவதற்கு அம்பாறை மாவட்டத்தில் புதிதாக பல கொரோனா சிகிச்சை மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்கமைய அட்டாளைச்சேனை தள ஆயுர்வேத வைத்தியசாலை கொரோனா சிகிச்சை நிலையமாக மாற்றப்பட்டுள்ளது.

இவ் வைத்தியசாலையில் கொவிட்-19 தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கு வேறு பிரிவாக பிரிக்கப்பட்டு, அதன் நடவடிக்கைகள் யாவும் நிறைவு பெற்றுள்ளதாகவும், எதிர்வரும் நாட்களில் கொவிட்-19 தொற்றாளர்கள் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுவார்களெனவும் தெரிவித்தார்.

கொவிட்-19 தொற்று நோயாளர்களுக்கும் வைத்தியசாலைக்கும் எவ்வித தொடர்புகளும் இல்லாதவாறு பிரிக்கப்பட்டு, அருகிலுள்ள சுகாதார நிலையத்திற்கு வைத்தியசாலையின் நாளாந்த நடவடிக்கைகள் மாற்றப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் வெளி நோயாளர்களுக்கான சிகிச்சைகள் மற்றும் கிளினிக் என்பன தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதாகவும், நோயாளர்கள் எவ்வித தயக்கமின்றி தங்களுக்கான சிகிச்சைகளை பெற்றுக் கொள்ள முடியுமென கூறினார்.

எதிர்காலத்தில் தற்காலிகமாக ஒரு கட்டடத்தில் தங்கி சிகிச்சை பெறுவதற்கான விடுதி வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

# பெரிய நீலாவணை தொடர்மாடியில் 600 பேருக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கிவைப்பு

(எஸ்.சபேசன்)

தற்போது நாட்டில் பயணத்தடை விதிக்கப்பட்டுள்ள வேளையில் அன்றாடம் கூலித்தொழில் செய்யும் பெரியநீலாவணை தொடர் மாடியில் வசிக்கும் பொதுமக்களுக்கு மட்டக்களப்பு வட்ஸ் அமைப்பின் ஏற்பாட்டில் லண்டனைத் தலைமையாகக் கொண்டு இயங்கும் வட்ஸ் அமைப்பின் நிதி உதவி மூலம் 600 பேருக்கான உலர் உணவுப் பொதிகள் வழங்கிவைக்கும் நிகழ்வு நேற்று புதன்கிழமை வட்ஸ் அமைப்பின் பெரியநீலாவணைக்கான இணைப்பாளர் திருமதி பிரியதர்ஷினி நரேஸ் அவர்களது தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது அங்குவசிக்கும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் 1250 ரூபா பெறுமதியான உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டதுடன் மொத்தமாக 7 இலட்சத்து 50 ஆயிரம் பெறுமதியுடைய உலர் உணவுப்பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இப்பொதிகளை அம்பாரை மாவட்ட மேலதிக அரச அதிபர் ஜெகதீசன் கல்முனைத் தமிழ்ப்பிரிவு பிரதேசசெயலாளர் அதீசயராஜ் அபிவிருத்தி உத்தியோகத்தர் தர்மலிங்கம் மற்றும் அப்பிரதேச கிராமசேவை உத்தியோகத்தர் கேதீஸ் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இவ் வட்ஸ் அமைப்பானது பெரியநீலாவணைத் தொடர்மாடியிலும் அதனை அண்டிய பகுதிகளில் கல்விகற்கும் மாணவர்களின் நன்மை கருதி 2018ஆம் ஆண்டில் இருந்து தரம் 1 இல் இருந்து 11 வரையிலான மாணவர்களுக்கு இலவச வகுப்புக்களை தனியான கல்வி நிலையம் ஒன்றினை நிறுவி நடாத்திவருகின்றமை குறிப்பிடத்தக்கது.இதே வேளை உள்ளூர் உற்பத்தியாளர்களின் உற்பத்திப் பொருட்கள் விற்பனை செய்யும் நோக்குடன் உள்ளூர் உற்பத்தியாளர்களிடம் உற்பத்திசெய்யப்பட்ட பொருட்களையும் இவ் அமைப்பு கொள்வனவுசெய்து பொதுமக்களுக்கு வழங்கிவைத்தமை விஷேடம்சாமாகும்.




அதேவேளை கடந்த ஆண்டு இவ்வாறு நாடு முற்றாக முடக்கப்பட்டிருந்த காலங்களில் இத்தொடர்மாடியில் வசித்துவரும் மக்களுக்கு உலர் உணவுப்பொதியினை வழங்கிவைத்து மக்களின் நலனோம்பும் செயற்பாட்டினை மட்டக்களப்பு வட்ஸ் அமைப்பின் நிருவாகத்தின் மூலம் லண்டன் வட்ஸ அமைப்பு செய்துள்ளமை அனைத்து தரப்பினர்களிடமிருந்தும் பாராட்டுக்கள் கிடைத்துவருகின்றன. அதேவேளை இவ்வாறான உதவிகளை செய்து இக்காட்டன சூழலில் மக்களுக்கு உதவிக்கொண்டிருக்கின்ற வட்ஸ் அமைப்புக்கு அப்பிரதேச மக்கள் நன்றிகளைத் தெரிவித்துள்ளனர்.



# 1000 வேண்டுமென்றால் 26 கிலோ கொழுந்து பறிக்குமாறு தோட்ட நிர்வாகம் கட்டளையிடுகின்றது

## லங்கா தோட்டத் தொழிலாளர்கள் போராட்டம்

(க.கிஷாந்தன்)

“ஆயிரம் ரூபா சம்பளம் வேண்டுமென்றால் 26 கிலோ கொழுந்து பறிக்குமாறு தோட்ட நிர்வாகம் கட்டளையிடுகின்றது. அதுமட்டுமல்ல வேலை நேரமும் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனை ஏற்முடியாது. எமது தொழில் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்.” என வலியுறுத்தி மஸ்கெலியா, லங்கா தோட்டத் தொழிலாளர்கள் கனவயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.



மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாட் சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும் என சம்பள நிர்ணய சபையில் தீர்மானம் எடுக்கப்பட்டு அது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலும் வெளியாகியுள்ளது.

முன்னர் செய்த வேலையின் அளவுக்கே இந்த சம்பள உயர்வு வழங்கப்படுகின்றது, மேலதிகமாக எதையும் செய்ய வேண்டியதில்லை என கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் தொழிற்சங்கங்கள் அறிவிப்பு விடுத்தன.

எனினும், ஒரு மாதம் மட்டுமே எமக்கு ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது. அதன்பின்னர் உரிய வகையில் சம்பளம் வழங்கப்படவில்லை என சுட்டிக்காட்டும் லங்கா தோட்டத் தொழிலாளர்கள், அதற்கான காரணங்களையும் குறிப்பிட்டனர்.

“ஆயிரம் ரூபா கிடைப்பதற்கு முன்னர் நாட் சம்பளத்துக்கு பெண்கள் 16 கிலோ கொழுந்து எடுக்க வேண்டும். தற்போது அந்த அளவு 20 கிலோ ஆக்கப்பட்டுள்ளது. நாளொன்றுக்கு மூன்று தடவைகள் கொழுந்து அளக்கப்படும். ஒரு தடவைக்கு 2 கிலோ கழிக்கின்றனர். மூன்று தடவைக்கு ஆறு கிலோ கொமிஷ் அடிக்கின்றனர். அப்படியானால் ஆயிரம் ரூபா சம்பளத்துக்கு 26 கிலோ பறிக்க வேண்டும்.

கொழுந்து இல்லை. 18 கிலோ பறித்தால் கூட அரைநாள் சம்பளம் வழங்கப்படும் நிலை காணப்படுகின்றது.

ஆண் தொழிலாளர்கள் காலை 8 மணிக்குச் சென்று பிற்பகல் ஒரு மணிக்கு வந்துவிடுவர். தற்போது அவர்களுக்கான வேலை நேரமும் அதிகரிக்கப்பட்டுள்ளது. தோட்ட நிர்வாகத்தின் இந்த அணுகுமுறையை ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

எனவே, அரசாங்கமும், தொழிற்சங்கங்களும், தொழில் அமைச்சும் தலையிட்டு எமக்கு உரிய தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டும்.” என்றனர் தொழிலாளர்கள்.

# சர்வமத தலைவர்களுக்கான கோரானா அனர்த்த நன்கொடைத் தோகை வழங்கும் வைபவம்



(எப்.முபாரக்)

அல் ஹித்மதுல் உம்மாஹ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரின் ஜே.எஸ்.அருள்ராஜ் தலைமையில் சர்வமத தலைவர்களுக்கான கொரானா அனர்த்த நன்கொடைத் தொகை வழங்கும் வைபவம் இடம்பெற்றது.

இதன் போது சர்வமதத் தலைவர்களுக்கான உதவித் தொகையாக ரூபா 50,000.00 வழங்கி வைக்கப்பட்டது. இத்தொகையை அல் ஹித்மதுல் உம்மாஹ் நிருவத்தின் பணிப்பாளர் கஸ்ஸாலி முகம்மட் பாத்திஹ் வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் சர்வமத சார்பில் மொரவாவ பௌத்த விகாராதிபதி களுத்துர சோமசிறி தேர்ர், கோமரங்கடவெல விகாராதிபதி தம்மானந்த தேர்ர் ஆகியோரும் இந்து மத சார்பில் சுவாமி கிரிஷ்ணா ஷர்மா அவர்களும் கிரிஸ்தவ மத சார்பில் தந்தை நொய்ல் இமானுவேல் அவர்களும் இஸ்லாமிய சமயம் சார்பாக திருகோணமலை மாவட்ட ஜம்இய்யத்துல் உலமா சபைத் தலைவர் கலாநிதி ஏ.ஆர் நசார் மற்றும் ஏ.ஜே.எம்.றியாஸ் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

மேலும் இந்நிகழ்வில் கிண்ணியா பிரதேச செயலாளர் ஜனாப் கனி அவர்களும் இலங்கை தென்கிழக்குப் பல்கலைகழக சிரேஷ்ட விரிவுரையாளர் மௌலவி எம்.ரீ.ஹபீபுல்லாஹ் அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் சமயத் தலைவர்களின் ஆசியுரையும் வாழ்த்துரையும் இனிதே இடம்பெற்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய பாத்திஹ் அவர்கள் தனது நிருவனம் கடந்த காலத்திலும் தற்போதைய சூழலிலும் இன மத மொழி வேறுபாடுகளிக்கு அப்பால் சென்று சமூக பணிகளை மேற்க் கொண்டு வருகின்றது எனவும் எதிர் காலங்களிலும் பாரிளவிலான சமூக வேலைத் திட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாக இதன் போது தெரிவித்தார்.

# தம்பிலுவில் தேசிய கல்லூரியின் 15வது அதிபராக சந்திரேஸ்வரன் பொறுப்பேற்றுக் கொண்டார்



(திருக்கோவில் நிருபர்)

அம்பாரை திருக்கோவில் வலயக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட தம்பிலுவில் மத்திய மகா விதிதியாலயத்தின் (தேசிய கல்லூரி) 15வது புதிய அதிபராக தம்பிலுவிலைச் சேர்ந்த கல்விமாணி ஆங்கில ஆசான் பாலசுந்தரம் சந்திரேஸ்வரன் தனது கடமைகளை பொறுப்பெற்றுக் கொண்டார்.

இவ் நிகழ்வானது திருக்கோவில் வலயக் கல்விப் பணிப்பாளர் வை.ஜெயச்சந்திரனின் முன்னிலையில் கொவிட் 19 சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக இடம்பெற்ற நிகழ்வில் புதிய அதிபர் தமது கடமைகளை உத்தியோகபூர்வமாக ஏற்றுக் கொண்டு இருந்ததுடன் இன்றுவரை சிறந்த முறையில் பாடசாலை நிருவாகத்தினை நெறிப்படுத்தி கல்வி நடவடிக்கைகளை ஆரோக்கியமாக முன்னெடுத்துச் சென்ற முன்னாள் அதிபர் எஸ்.ரவிஸ்கரனும் நிகழ்வில் கலந்து கொண்டு இருந்தார்

அம்பாரை திருக்கோவில் பிரதேசம் தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயத்தின் பழைய மாணவரான இவர் தனது பாடசாலைக் கல்வியை நிறைவு செய்து 1984 ஆம் ஆண்டு ஆங்கில ஆசானாய் முதல் நியமனம் பெற்று பொத்துவில் ஏற்றம் பாடசாலையில் தனது ஆசிரியர் சேவையை ஆரம்பித்து இருந்தார்.

இதனைத் தொடர்ந்து 1985ஆம் ஆண்டு பொத்துவில் மெதடிஸ்த மிசன் மகா வித்தியாலயத்தில் ஆசிரியராக இடமாற்றம் பெற்றுச் சென்று 1990ஆம் ஆண்டு வரை ஆசிரியர் பணியை பொத்துவிலில் முன்னெடுத்து இருந்தார்.

இதனையடுத்து 1990ஆம் ஆண்டு தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்று இப்பாடசாலையில் கடமையாற்றி இருந்ததுடன் 2010ஆம் ஆண்டு விநாயகபுரம் பாலக்குடா பாலவிநாயகர் வித்தியாலயத்தில் அதிபராகவும் பின் 2010ல் இருந்து 2015 ஆம் ஆண்டுவரை தம்பிலுவில் கலைமகள் வித்தியாலயத்திலும் அதனைத் தொடர்ந்து 2015 ஆம் ஆண்டு காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரில் பிரதி அதிபராகவும் தனது கல்விச் சேவையினை முன்னெடுத்து வந்துள்ளதுடன் அம்பாரை மாவட்ட திருநாவுக்கரசு நாயனார் குருகுல ஆதீனத்தின் சிரேஷ்ட நிருவாக உறுப்பினரும் இருந்த சமூக ஆன்மீகப் பணிகளை முன்னெடுத்து வருகின்றார்.

இந்நிலையில் 03 06 2021ந் திகதியில் இருந்து தம்பிலுவில் தேசிய கல்லூரியின் புதிய அதிபராக பாலசுந்தரம் சந்திரேஸ்வரன் (பாபு) நியமிக்கப்பட்டுள்ளதுடன் இவ் நியமனமானது தேசிய பாடசாலைகளுக்கு அதிபர்களை தெரிவு செய்ய நடாத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையில் தெரிவின் அடிப்படையில் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவை குழுவின் செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் இவ் அதிபர் நியமனம் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மன்னாரில் சேதன பசளை உற்பத்தி செய்வோர் முன்வர வேண்டும்

## உதவி ஆணையாளர் மரின்குமார்

(வாஸ் கூஞ்ஞ)

விவசாயிகள் சேதன பசளைகளைக் கொண்டே தங்கள் விவசாய செய்கையை முன்னெடுக்க வேண்டும் என்ற நிலையில் மன்னார் மாவட்டத்தில் சேதன பசளை உற்பத்தியாளர்கள் தொகையை நோக்கும்போது இது மன்னார் மாவட்ட விவசாயிகளுக்கு பூர்த்தி செய்யக்கூடியதாக இல்லாமையால் சேதன பசளை உற்பத்தி செய்ய ஆர்வம் உள்ளோர் உடன் பதிவு செய்ய முன்வர வேண்டும் என மன்னார் மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் அ.மரின்குமார் இவ்வாறு தெரிவித்தார்.



விவசாயிகள் தங்கள் பயிர் செய்கைக்கு இரசாயன உரங்களை தவிர்த்து சேதன உரங்களைக் கொண்டு பயிர் செய்கையில் ஈடுபட வேண்டும் என அரசு தற்பொழுது கவனம் செலுத்தியுள்ளது

இதற்கமைய நாடு பூராகவும் சேதன பசளை உற்பத்தி செய்வோர் தங்கள் பெயர் விபரங்களை கமநல அபிவிருத்தி திணைக்களங்களில் 0%.06.2021 தொடக்கம் 18.06.2021 வரை இப்பதிவுகளை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மன்னார் மாவட்டத்தில் மன்னார் மாவட்ட கமநல சேவைகள் அபிவிருத்தி திணைக்களம் இதற்கான வேலை திட்டத்தை கமநல சேவை மத்திய நிலையத்துடன் இணைந்து தற்பொழுது முன்னெடுத்து வருகின்றது. என மன்னார் மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் அ.மரின்குமார் இவ்வாறு தெரிவித்தார்.

இதுவரைக்கும் மன்னார் மாவட்டத்தில் 90 நபர்களே இவ் சேதன பசளை உற்பத்தி செய்வதற்கான தங்கள் ஆர்வத்தைக் காட்டுமுகமாக தங்கள் பெயர்களை பதிவு செய்துள்ளனர் எனவும்

மன்னார் மாவட்டத்தைப் பொறுத்தவரை சேதன பசளை உற்பத்தி செய்வதற்கான சகல வசதிகளும் காணப்படுவதால் தற்பொழுது பதிவு செய்திருப்போர் தொகையை நோக்கும்போது இவர்களால் உற்பத்தி செய்யப்படும் சேதன பசளைகள் மாவட்ட விவசாயிகளுக்கு பூர்த்தி செய்வதாக அமையாது என கவலை தெரிவித்தார்.

தற்பொழுது கொரோனா காரணமாக பயணத்தடைகள் அமுலில் இருப்பதால் இதில் ஆர்வம் உடையோர் மன்னார் மாவட்டத்திலுள்ள கமநல சேவைகள் நிலையங்களுக்கு சென்று தங்கள் பதிவுகளை மேற்கொள்ள முடியாது இருக்குமாகில் இவற்றை இலகுபடுத்தும் முகமாக கூகுல் மூலம் தொடர்புகளை ஏற்படுத்தி பதிவுகளை மேற்கொள்ள முடியும் எனவும் மன்னார் மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் அ மரின்குமார் இவ்வாறு தெரிவித்தார்.

# நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிக்கும் வகையில் தகவலறியும் சட்டத்தை பயன்படுத்தவேண்டும்

## ரான்ஸ்பேரன்சி அமைப்பின் திட்ட அதிகாரி தெரிவிப்பு

(பொன்ஆனந்தம்)

தகவலறியும் சட்டத்தை நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிக்கும் வகையில் அதனை பயன்படுத்த வேண்டும் என ரான்ஸ்பேரன்சி சிறிலங்கா அமைப்பின் திட்ட அதிகாரி திருமதி பிரியா போல் ராஜ் குறிப்பிட்டார்.

மூதூர் பிரதேச சபையின் உத்தியோகத்தர்கள், உறுப்பினர்கள் கலந்து கொண்ட செயலமர்வில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஒன்லைன் தொழில் நுட்பத்தை பயன்படுத்தி ஆசிய பவுண்டேசன் அமைப்பின் ஆதரவுடன் இளைஞர் அபிவிருத்தி அகம் அமைப்பின் ஏற்பாட்டில் அதன் இணைப்பாளர் பொ. சற்சிவானந்தம் தலைமையில் நேற்று காலை 10.00 மணியளவில் ஆரம்பமான இப்பயிற்சி பிற்பகல் ஒருமணியளவில் நிறைவடைந்து.

இச்செயலமர்வில் பிரதேச சபையின் தவிசாளர் ஏ. எம். ஆருஸ். செயலாளர் செல்விவி. சத்தியஜோதி, சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்ச. முரளிதரன் உள்ளிட்ட 20பேர்வரை கலந்து கொண்டனர்.

இங்கு தகவலறியும் சட்டத்தை எவ்வாறு மக்கள் பயன்பெறும் வகையில் நடைமுறைப்படுத்தலாம் என்பது பற்றி ஆராயப்பட்டது. இங்கு வளவாளர்களாக ரான்ஸ்பேரன்சி அமைப்பின் அதிகாரிகள் கலந்து கொண்டனர். எமது நாட்டின் தகவலறியும் உரிமை ச்சட்டம் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் சிறப்புக்களை கொண்டு ள்ளது. உலகில் நான்காவது இடத்தில் உள்ளது அதனை இந்த நாட்டின் ஊழலை ஒழிக்க நாம் பயன்படுத்த முடியும் எனவும் பலரும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# ஏறாவூரில் 605 குடும்பங்களை சேர்ந்த 2420 பேருக்கு உலருணவுப் போதிகள்

(ஏறாவூர் நிருபர் நாஸர்)

ஏறாவூர் பிரதேசத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள கிராமத்திலுள்ள 605 குடும்பங்களை சேர்ந்த 2420 பேருக்கான உலருணவுப் பொதிகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

ஏறாவூர் பிரசேத்தில் நானூற்றுக்கு அதிகாமானவர்கள் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளதுடன் இதுவரை எட்டு மரணங்கள் பதிவாகியுள்ளன.

இதையடுத்து ஏறாவூர்02 என்ற கிராம சேவகர் பிரிவு கடந்த 6 ஆந் திகதிமுதல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

இப்பிரதேசத்திலுள்ள குடும்பங்களுக்கு பகிர்நதளிப்பதற்கென பிரதேச செயலாளர் நிஹாறா மௌஜூத் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க ஏறாவூர்ப்பிரதேச தனவந்தர்கள் உலருணவுப்பொதிகளை நன்கொடையாக வழங்கியுள்ளனர்.

இப்பொதிகள் பிரதேச செயலக அதிகாரிகள் மற்றும் கிராம சேவையாளர்கள் மூலமாக பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன.



இப்பொதிகளில் அசிரி, சீனி, பருப்பு, கோதுமை, நெத்தலி மற்றும் நூடில்ஸ் உள்ளிட்ட பொருட்கள் காணப்பட்டதாக பிரதேச செயலக அனர்த்த நிவாணர உத்தியோகத்தர் எம்எம். அஷ்ரப் தெரிவித்தார்.

தனிமைப்படுத்தப்பட்ட பகுதியில் 84 பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள், 19 ஓய்வூதியம் பெறுவோர் மற்றும் 70 அரச ஊழியர்களும் உள்ளடங்குகின்றனர்.

# இந்தியாவில் நிர்கதியாகியுள்ள இலங்கை மாணவர்கள்

(நூருல் ஹுதா உமர்)

கொரோனா அலையில் கடுமையாக இந்தியா பாதித்துள்ளமையினால் இந்தியாவின் அதிக மாநிலங்கள் முழுமையான முடக்கத்தில் சிக்கியுள்ளது. இந்த பாதிப்பினால் அங்கு தங்கியிருந்து இந்திய பல்கலைக்கழகங்களில் கல்விபயிலும் இலங்கை மாணவர்கள் நாட்டுக்கு திரும்பிவர முடியாமல் சிக்கித்தவித்து வருவதாக கவலை வெளியிட்டுள்ளனர்.

இந்தியாவின் ஒடிசா மாநிலத்திலுள்ள பல்கலைக்கழகம், வடமாநில பிரதேசங்களில் உள்ள பல்கலைக்கழகங்கள், தமிழகத்திலுள்ள பல்கலைக்கழகங்கள் என இந்தியாவில் பல்வேறு பிரதேசங்களில் அமைந்துள்ள கல்விநிலையங்களில் கல்விபயின்று வரும் இலங்கையின் பல்வேறு பிரதேசங்களையும் சேர்ந்த மாணவர்கள் பல மாதங்களாக கடுமையாக முயன்றும் இலங்கைக்கு திரும்பிவர முடியாமல் தவித்து வருவதுடன் நாட்டுக்கு திரும்பிவரவென விமான பயணசீட்டுக்கள் முன்பதிவுகள் செய்திருந்தும் அவைகள் இறுதி நேரங்களில் ரத்தாகி வருவதனால் பல்வேறு அசௌகரியங்களை சந்தித்து வருவதாகவும், உணவுகளை பெறுவதில் கூட பிரச்சினை இருப்பதாகவும் பல்வேறு சுகாதார நெருக்கடிகளை அனுபவிப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

மேலும் தங்களின் உயிர்களை பாதுகாத்து கொள்ள தூதரகங்கள், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, சுகாதார அமைச்சு என பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டிருந்த போதிலும் அவை சாத்தியப்பாடாமல் போனதாகவும் எதிர்வரும் நாட்களில் இந்திய தேசிய கிரிக்கட் அணி இலங்கை அணியுடனான கிரிக்கட் போட்டிக்காக இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ள சந்தர்ப்பத்தை பயன்படுத்தி எங்களை நாட்டுக்கு அழைத்துவர நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி, பிரதமர், வெளிவிவகார அமைச்சர் உட்பட சம்பந்தப்பட்ட அதிகாரிகளை நிர்கதியாகியுள்ள மாணவர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# நிந்தவூரில் பூஸ்டர் வழங்கி வைப்பு



(யாக்கூப் பஹாத்)

நாட்டில் ஏற்பட்டு இருக்கும் அசாதாரண சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு கொவிட்-19 வைரசுக்கெதிரான நோய் எதிர்ப்பு சக்தி மிகுந்த பூஸ்டர் மருந்து வகைகளை இலவசமாக வழங்கி வைக்கும் நிகழ்வு நிந்தவூர் பிரதேசங்களில் நேற்று இடம் பெற்றது.

கொவிட்-19 இன் தாக்கம் நிந்தவூர் பிரதேசம் மட்டும் அல்லாது முழு நாட்டிலும் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து காணப்படுவதனையிட்டு எமது நிந்தவூர் மாவட்ட வைத்தியசாலையின் வைத்தியர்களானநபில், நஜீப்,. ரிஸ்மியா ஆகியோரின் மூலமாக ஆயுர்வேத பூஸ்டர் மருந்து பொதிகள் இன்று மக்களுக்கு வீடு வீடாகச் சென்று வழங்கி வைக்கப்பட்டது.

அது மட்டுமல்லாது இக்கொடிய நோயான கொவிட்-19 இல் இருந்து நான் எவ்வாறு பாதுகாப்பு பெற வேண்டும் என்பது தொடர்பாகவும் பல விடயங்களை மக்களுக்கு விழிப்புணர்வு மூலமாக தெளிவுபடுத்தினர்.

# காரைதீவில் மேலும் அறுவருக்கு தொற்றுறுதி!



(வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையின் போது, காரைதீவு பிரதேசத்தைச் சேர்ந்த 06 பேருக்கு கொவிட் -19 தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் டாக்டர் தஸ்ஸீமா வசீரின் ஏற்பாட்டில், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மேற்கொண்ட பிசிஆர் சோதனை நடவடிக்கை காரைதீவு மாவடிப் பள்ளி மாளிகைக் காடு பகுதிகளில் இடம் பெற்றது.

இதன்போது ஆறு பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டதென தலைமை பொதுச் சுகாதார பிரிசோதகர் சா.வேல்முருகு தெரிவித்தார்.

இவ்வாரம் மரணித்த ஒருவரின் குடும்பத்தினரும், மற்றுமொரு கிராமசேவை உத்தியோகத்தரும் தொற்றுக்கிலக்காகி பாலமுனை மருதமுனை இடைத்தங்கல் கொவிட் நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

காரைதீவு பிரதேசத்தில் இதுவரை 154பேர் தொற்றுக்கிலக்காகியுள்ளதாகவும் 134பேர் குணமாகி வீடுவந்துள்ளதாகவும் ,18பேர் தற்போது சிகிச்சை பெற்றுவருதும், இதுவரை இருவர் மரணித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# சேதன விவசாய உர உற்பத்தியை வலுவூட்டும் வேலைத்திட்டம் சம்மாந்துறையில் முன்னெடுப்பு!



(ஐ.எல்.எம் நாஸிம்)

நாட்டின் விவசாயத்துறையில் முழுமையாக சேதன உரப் பயன்பாட்டை கொண்டுவருவது நோக்கில் சனாதிபதி அவர்களால் "சுபீட்சத்தின் நோக்கு" தேசிய வேலைத் திட்டத்தின் ஊடாக நாடு தழுவிய வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

"தேர்தல் காலங்களில் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளுக்கு ஏற்ப செயற்படுவது ஆட்சிக்கு வரும் அரசாங்கத்தின் பொறுப்பாகும்."

அந்த வகையில் முந்தைய அரசாங்கங்கள் சேதன உரப் பயன்பாட்டை பிரபலப்படுத்த பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்ட போதும் அதைத் தொடர்ச்சியாக நடைமுறை படுத்த முடியவில்லை.

அது சவாலான கடினமான பணியாக பார்க்கப்பட்டது் எனினும் சரியான மூலோபாயத்தை அடையாளம் கண்டு நாட்டுக்காக கட்டாயம் செய்யப்பட வேண்டிய ஒன்றாகும்" என்று ஜனாதிபதி அவர்களினால் வலியுத்தப்பட்டிருந்தது

அதற்கமைய சம்மாந்துறை பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட ஓர் பகுதியில் விவசாயி ஜி.எம் சித்தீக் அவர்களினால் சேதன உரம் (கம்போஸ்ட் உரம்) தயாரிக்கும் முயற்சி சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அதனை பார்வையிட சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம் ஹனிபா தலைமையில் சம்மாந்துறை மல்வத்தை விவசாய விரிவாக்கல் நிலையங்களுக்கான நிலைய பொறுப்பதிகாரி எம்.டி.எ கரீம் உள்ளிட்ட விவசாய போதனாசிரியர் எம் ரீ எம் . நளீர், தொழிநுட்ப உதவியாளர் ஏ.ஜீ.எம். ரிபாஷ் உள்ளிட்ட குழு சென்று சேதன உர உற்பத்தி மற்றும் பயன்பாட்டுக்கான மேலதிக ஆலோசனைகளையும் வழிகாட்டுதல்களையும் வழங்கிவைத்தமை குறிப்பிடத்தக்கது.

முற்று முழுதாக விவசாய போதனாசிரியர்களின் கண்காணிப்பு மற்றும் வழிகாட்டுதலின் கீழ் பாரிய அளவில் சேதன பசளை உற்பத்தி செய்யவிருப்பதாக சம்மாந்துறை மல்வத்தை விவசாய விரிவாக்கல் நிலையங்களுக்கான நிலைய பொறுப்பதிகாரி எம்.டி.எ கரீம் தெரிவித்தார்.

# கல்முனை வடக்கு பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கு ISO தரம் கொண்ட முகக் கவசம் வழங்கிவைப்பு



(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

கல்முனை வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கு ISO தரம் கொண்ட HAYLEYS கம்பெனியின் ஒரு தொகை OXIPURA முகக் கவசங்களை கல்முனை அக்றம் பாம் ஹவுஸ் நிறுவனம் இலவசமாக வழங்கிவைத்தது.

நிறுவனத்தின் சார்பில் றபீக் அப்துல் மஜீத், முபாறக் அப்துல் மஜீத், அத்னான் அப்துல் மஜீத், முகம்மட் முஜாஹித் உள்ளிட்டோர் இதில் கலந்து கொண்டனர்.